# ஹரோ தமிழ் பாடசாலை திருக்குறள் போட்டி 2026

# ஆண்டு - 6 (Year 6)

## 1/09/2014 - 31/08/2015 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

## போட்டி நடைபெறும் திகதி 09/05/2026

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

மாணவர்கள் 6 குறள்களையும் அதற்குரிய பொருள்களில் அவர்களுக்குப் பிடித்த
5 பொருள்களையும் கூறவேண்டும்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து (குறள் 125)

பொருள்:- பணிவு என்னும் பண்பு, எல்லார்க்கும் நலம் பயக்கும் என்றாலும், செல்வர்களுக்கு அந்தப் பண்பு, மேலும் ஒரு செல்வமாகும்

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். (குறள் 461)

பொருள்: எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் அல்லது தீமை ஏற்படும் என்று விளைவுகளை ஆராய்ந்து பார்த்த பின் ஒரு செயலில் இறங்க வேண்டும்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.** (குறள் 467)

பொருள்: நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்; இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு.

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** (குறள் 400)

பொருள்: கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு** (குறள் 788)

**பொருள்:-** அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்து செயல் படுவதே நட்புக்கு இலக்கணமாகும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (குறள் 505)

பொருள்: ஒருவருடைய பெருமைக்கும் சிறுமைக்கும் ஆராய்ந்து அறியும் உரைகல்லாக இருப்பவை அவருடைய செயல்களேயாகும்.